NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu,* p3
**Date:** 7 June 2018

# கடற்துறையில் புத்தாக்கத்தை விரைவுபடுத்தும் புதிய திட்டம்

சிங்கப்பூர் கடற்துறையில் புத்தாக்கத்தை விரைவுபடுத்தும் புதிய திட்டம் அறிமுகம் கண்டுள்ளது.

'பியர்71' எனப்படும் அந்தத் திட்டம், கடற்துறை நிறுவனங்களும் புதிய தொழில்நுட்ப நிறுவனங்களும் இணைந்து செயல்பட வழிவகுக்கும்.

சிங்கப்பூர் கடற்துறை துறைமுக ஆணையமும் என்யுஎஸ் என்டர்பிரைஸும் அந்தப் புதிய முயற்சியைத் தொடங்கியுள்ளன.

போக்குவரத்து, சுகாதார மூத்த துணை அமைச்சர் லாம் பின் மின் இந்தத் திட்டத்தை அதிகாரபூர்வமாகத் திறந்து வைத்தார்.

இதன் ஒரு பகுதியாக, என்யுஎஸ் என்டர்பிரைஸ் நான்கு அனைத்துலகப் பங்காளிகளுடன் நான்கு இணக்கக் குறிப்புகளில் கையெழுத்திட்டது. 'பியர்71' திட்டத்தின் முதல் பயிலரங்கு சென்ற மாதம் 15ஆம் தேதி நிறைவடைந்தது. அதில் 23 கடற்துறை நிறுவனங்கள் பங்கேற்றன.

"கடற்துறை நிறுவனங்களுடனும் புதிய தொழில்நுறை நிறுவனங்களுடனும் ஒத்துழைப்பை மேம்படுத்த பியர்71 திட்டம் ஊக்கமளித்து, கடற்துறைக்குத் தேவையான மின்னிலக்க தொழில்நுட்ப வளர்ச்சிக்கு வித்திடும்," என்றார் சிங்கப்பூர் கடற்துறை துறைமுக ஆணையத் தலைமை நிர்வாகி ஆண்ட்ரூ டான்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.